நவம்பர் 2012 NOVEMBER 2012

VASANTHAM Tamil Monthly

ملحق مجلة البشرى باللغة التاميلية    مجلة الربيع


# வசந்தம்


வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

6 - 7

The Spring | மாத இதழ்




என் கண்கள் சுமந்த கனவுக ளெல்லாம்..!



இல்லறச் சிறப்பிதழ்!

## நல்லதொரு குடும்பம்..! பல்கலைக்கழகம்..!!

இச்சைக்கு மட்டுமா இல்வாழ்க்கை..?

கடமையே கண்ணென போற்றும் கணவனாய்..!

நான் விரும்பும் என் அழகிய மணாளன்..!


இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

IPC

لجنة التعريف بالإسلام

ISLAM PRESENTATION COMMITTEE

# பெருமானங்களுக்கு முன் பூச்சியமாய்..!



எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏக்கத்துடன்..,
எத்தனை உறவுகள் விடை பெறுகின்றன
அவர்களை விட்டும்.., ஒரு தினத்தில்..!
கதறி, கதறியே.., அவர்கள்
நாவுகள் சஹாராவாய்..!

இனியும் இழப்பதற்கு
என்ன மீதி.? கட்டாயகல்வி கூட
அவர்களுக்கில்லை..,
பிரத்யேக வகுப்புக்கள் போகும்,
மற்ற பிள்ளைகளுக்கு மத்தியில்..

செல்லப்பிள்ளைகளாக நாய்கள், நரிகள்..!
அவைகளுக்கு குஷன் மெத்தைகள்..!
Soft Drinks-களுடன் சிப்ஸ் உணவுகள்..!!
மருந்துகளின்றி மரணிக்கின்றனர் -நம்
ஈமானிய தாய்மாரின் மழலைகள்..!

ஆம்..!
இன்று ஓங்காரமிடும் ஓநாய்கள்
அவர்களின் தேசத்துக்குக் காவல்.!

பொறுங்கள்..!இறைநாடின்..,


நாளை அவர்கள் விரல்கள்
துப்பாக்கியாகும்..!
தக்வா நிறைந்த அவர்தம்
கல்புகள் கல்மாரி பொழியும்.
பார்வைகள் அவர்களை பொசுக்கும்..!

இப்படி பெருமானங்களுக்கு முன்
மானமில்லா பூச்சியமாக..,
உலகில் நடைப்பிணமாய் நடமாடுவர்..,
நம் இஸ்லாத்தின் துரோகிகள்..!
காஸாவை கசக்க நினைக்கும் காலிகள்..!!

---

நன்றி: ஸினூ:.பா அன்ஸார், சவுந்தர்ய முத்திரை, http://ipcblogger.net

# இந்த இதழில்..!




مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

மாத இதழ்
The Spring

VASANTHAM
TAMIL MONTHLY
NOVEMBER 2012
நவம்பர் 2012
மலர் 6 இதழ் 7



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

GENERAL SUPERVISOR
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

EDITOR
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

EDITORIAL BOARD
குழுமம்
இஸ்லாமிய நிலையம்
தமிழ்ப் பிரிவு

INITIAL LAY-OUT
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency



PUBLISHER n t s|a|L

لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية



CONTACTS தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
Editor's Desk
22447526, 22444117 | Extn: 208
Mob 97848068 -97266683 (Hotline)
FAX: 22400057
Attn: IPC—VASANTHAM
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
ipc.org.kw
vasanthamtamil.com

SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
facebook/vasanthamtamil
www.twitter/vasantham2k
YouTube Scribd.





இல்லறம் என்றும் தென்றல் வீசும் நல்லகம்..!அதன்
வளர்ந்தோங்கலுக்கு என்றும் வேண்டும் நல் அகம்..!


## வாழ்வியல்

**அபூஸவூத்**

## கடமையே கண்ணென போற்றும் கணவனாய்..! 12



கணவன் தான் கைக் கொண்டவளுக்கு அழகிய துணைவன்..! தான் பொறுப்பாக இருப்பவளின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் கொடையாளன்..!

## இரங்கல்

**சுவனப்ரியன்**

மர்யம் நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி தனது மக்களுடனும், சக மனைவியுடனும் சக்காளத்தி யாருடனும்) மாமனாரது ஒரு பெரிய, கூட்டுக்குடும்ப வீட்டில் வசித்து வந்தார். 18

## மறைந்தார்.., மர்யம் ஜமீலா.!



## பாலியல்

**நூல்**

## இச்சைக்கு மட்டுமா இல்வாழ்க்கை.. 14

பாலியல் என்பதும் மார்க்கத்துடன் தொடர்புடைய அம்சம்..!

## கவித்தூறல்கள்

**ஷேக் அப்துல் காதர்**

## என் கண்கள் சுமந்த...... 15

02 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து.!

03 எண்ணச் சிந்தனை
ஆசிரியரிடமிருந்து..!

08 பேட்டி
M.H. ஜவாஹிருல்லாஹ்

09 கல்வி
அபூமதீஹா

10 IPC வழித்தடங்கள்
அப்துல்லாஹ்

16 மழலையர் சோலை
சவுந்தர்யம்

17 விருந்தினர் பக்கம்
நாஸியா

19 சுற்றத்து செய்திகள்
அழகிய சிறியவன்

20 அறிவுப் போட்டி-44

بريد الربيع– كلمة العدد – أهمية الأسرة في الإسلام – من هو أحسن الزوج ؟ –هل الزواج لتكميل الهوى؟ – أنشطة اللجنة – في منامي (أشعار) – حفل مسابقة القرآن – هل الزواج مانع لتكميل مرحلة الدراسة – كيف يكون زوجي؟ – مريم الجميلة – كيف تكون المرأة المسلمة – المقابلة – أخبار العالم – مسابقة

# நெஞ்சில் பதியும் அழகு வசந்தம்..!



அழகுவசந்தம் குவைத் தமிழ் மக்களின் சந்தோஷம்..! தனது தனிச்சொற்களை உருவாக்கும் அழகுப் பொக்கிஷம்..!! மென்மையாய் மலரும் வசந்தம்.,! அதன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நெஞ்சில் பதியும்..!

**மீரா மைதீன்**
அய்யம்பேட்டை - தமிழகம்
ருமைதியா - குவைத்

**ஹம்மத் வைசூல் கருணை**
திருச்சி - தமிழகம்
சால்மியா - குவைத்

வாசகர் சுகந்தங்கள் பகுதியில் தொடர்ச்சியாய்.., நேர்த்தியாய்.., அழகாய்.., அஸ்மா.., வாசகர்கள் சார்பில் வசந்தத்துக்கு வளம் சேர்க்கின்றார்..! தொடரட்டும் சகோதரி..!IPC புனித ரமளான் நிகழ்வுகள் வியக்க வைக்கின்றன. குறிப்பாக..., இஸ்லாமிய தமிழ் பேரவை–இன் உருவாக்கத்துக்கு IPC எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.தமிழக மக்களை அழைத்து நிகழ்வுகள் நடத்தி முதன்முறையாக தமிழக மக்கள் நன்மை பெற வழிவகுத்த IPC–க்கு நன்றிகள்.



---

**T. நியாஸ் அஹமத்**
அபிவிருத்தீஸ்வரம் - தமிழகம்
மங்க.:.ப் - குவைத்

அழுகுக்கு ஆலாபனையா..? மழலைக்கு ஆரோக்கியமா..?? சர்வதேச தாய்ப்பால் ஊட்டும் தினம் குறித்த சிறப்புக் கட்டுரை கண்டேன்.தாய்ப்பாலின் உன்னத பயன்பாடுகளை அழகாய் விவரித்த விதம் அருமை..!நன்றி பாராட்டுக்கள்.,!!



---

அன்புள்ள வாசகர்களே! அனைவருடைய பெயர்களையும் இங்கு சேர்க்க பக்கங்கள் போதாததால்.., சிலரை மட்டுமே சேர்த்துள்ளோம்!அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்!தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!

தொடருவோர்..!

- aaisha.mala
- priya.shobana.58
- mananthrmd
- sabreen.jaseeth
- aahazack1
- npeermaraikayar
- hidhayathul.shajahan
- burkitalavudeen
- syedskp
- kasi.thamizhselvan
- san.nazlinatha
- thaji.nisha.9

இன்னும் பலர்..!

தொடருவோர்..!

Amitabh Bachan@AmitabhBachan
கயல்விழி@vimalashriOneindia

வசந்த இடுகைகள் முகநூலில் கண்டு இஸ்லாத்தைக் குறித்து பல விஷயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.எத்துணை அழகிய மார்க்கத்தை நாம் கொண்டுள்ளோம்..!அந்தோ.,! முஸ்லிம் சமுதாயம், கல்வி,சமூகநிலை சார்ந்த தளங்களில் எத்துணை பின்தங்கி இருக்கின்றார்கள்..!வாழ்வில் கொஞ்சம் ஜாலி,ஆசை,கனவு,சுயஇலாபங்கள், ஆகியன மனிதராய்ப் பிறந்த நமக்கு இருக்கும்தான்.ஆனால், அவற்றை எமது மார்க்கம் காட்டும் வழியில் ஆக்கபூர்வமாக மதித்து நடக்கலாமே..! குறைந்தபட்சம்..!நம்பிக்கைக்கு உரமூட்டி,நன்மையை ஏவி தீமையைத் தடுத்து, எச்சரித்து நடக்கலாம்..! முகநூல் வெறும் பொழுதுபோக்காக இல்லாமல், ஆயிரக்கணக்கான உள்ளங்களை நற்சிந்தனைகளின்ால் இட்டுச்செல்லும் அழகிய தளமாகக் கருதி பார்க்க.,,படிக்க.,பயன்படுத்த வேண்டுமே தவிர.., வீணாக அல்ல..!அத்தகைய அழகிய பணியை ஆற்றுகின்றது வசந்தம்..!




**ஷஹ்ரஜாத் ரீமா**
கொழும்பு
இலங்கை

http://www.facebook.com/shahrazath.reema

---

வசந்த தலையங்கம் கண்டேன்..!அருமை.,!அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களைக் குறித்து உலக நயவஞ்சகர் சிலர் கொண்டிருக்கும் அழுக்கு எண்ணங்களை நினைத்தால்.., அன்றிலிருந்தே மலரும் காலைபொழுது ஒவ்வொன்றும் புதுவிதமான ஆடை சூடியே புறப்பட்டு வருகிறது....... விடைபெறும்போதுதான் ஆடை முழுவதும் அழுக்காகிப்போகிறது....!மலர்வதெல்லாம் மலரும் அல்ல, மலந்ததெல்லாம் மனிதனுக்குத்தான்..... ஏனோ தெரியவில்லை சிலமனிதமனங்களுக்கு எங்கள் உயிருக்கும் மேலானவரின் நற்குணங்களை.....!



**பகல் நிலவு**
பெரம்பலூர்,
தமிழகம்
(குவைத்)

http://www.facebook.com/aknajimu



அன்பு வாசகர்களே.., படைப்பாளர்களே..! உங்கள் படைப்புக்களை அனுப்பும்போது குறைந்தபட்சம், மின்னஞ்சல் முகவரி,செல்லிடைப்பேசி எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள்..!

முஸ்லிம்களை மட்டுமே குறி வைக்கும் துப்பாக்கிகள்..!இஸ்லாத்தை புதைக்க நினைக்கும் புல்லுருவிகள்..!உலகளாவிய அளவில் திரிந்து வரிந்துகட்டி நிற்கின்றார்கள்..! ஆம்..!காட்சித் தாக்குதல்கள் கவைக்குதவாததாக ஆகிவிட்டதால்,இறைவனின் மார்க்கத்தையும், அவனது புகழ் பாடும் அடியார்களையும் சிந்தனைத் தாக்குதல் தொடுத்து, அழித்தொழிக்க நினைக்கும் நவீன ∴ பாரோக்கள்..!

ஆம்..!

நம்பிக்கையாளர்களின் உயிருக்கும் மேலானவரும்,உலகத்தார் அனைவருக்கும் அருட்கொடையாகவும் இருக்கின்ற அண்ணலார் (ஸல்) அவர்களை அவமதிப்பதாகக் கருதிக் கொண்டு, குறுமதியாளர்கள் எடுத்த குறும்பட சர்ச்சையின் சூடு ஆறுவதற்குள், தமிழுலக முஸ்லிம்களைக் கொதித்தெழச் செய்திருக்கின்றது ஒரு தமிழ்ப்படம்..!

துப்பாக்கி என்று வன்முறைக் காட்சிப்படுத்தல் உபகரணத்தையே தன் தலைப்பாகக் கொண்ட அப்படம்,திரைப்பட உலகம், பல்வேறு காலகட்டங்களில் இதுநாள்வரை சித்தரித்து வந்த,நல்ல அல்லது தீவிரவாத முஸ்லிம் கதாபாத்திரங்களின் காட்சிப்படுத்தல்களையெல்லாம் தாண்டி ஒரு அபாயகரமான சிந்தனையை முன்வைக்கின்றது.

ஆம்..!

எண்பதுகள் வரை திரைப்படங்கள், குறிப்பாக தமிழ்த் திரைப்படங்கள் ஒரு முஸ்லிம் கதாபாத்திரத்தின் கழுத்தில் தாயத்தை மட்டும் கட்டித் தொங்கவிட்டாலும், குறைந்தபட்சம் அவர்களை நல்லவர்களாகத்தான் காட்டி வந்தன. பாபரி மஸ்ஜித் இடிப்பு,மும்பை குண்டுவெடிப்புக்களுக்குப் பிறகு தீவிரவாதத்தோடு தொடர்புபடுத்தி அவர்களைக் காட்டின. ஆனால், இரட்டைக் கோபுரங்கள் தாக்குதலுக்குப் பின்னர், நிலைமை முற்றிலும் தலைகீழ்..!தீவிரவாதம் என்பது முஸ்லிம்,இஸ்லாம் என்பதாகவே காட்டப்பட்டது.

இந்நிலை வரையில் காட்டப்பட்டிருந்தாலும், வேறு ஏதோ வகையில் ஒருசில நல்ல கதாபாத்திரத்துக்கு உரியவர்களாக முஸ்லிம் குணநலன் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டும் வந்தது. ஆனால்,இயக்குநர் அன்பர் முருகதாஸ்,இவற்றையெல்லாம் தாண்டி,வன்முறை,தீவிரவாதம்,வகுப்புவாதம் ஆகிய அனைத்தையும் வெறும் கதாபாத்திரமாக அல்லாமல், சிந்தனா ரீதியாக ஒரு ஆபத்தான விதையை ஊன்றியிருக்கின்றார்,அமைதியான நிலங்களில்..!

கதாபாத்திர காட்சிப்படுத்தல் என்பது அந்த கதாபாத்திரத்துடன் நின்றுவிடும். ஆனால், துப்பாக்கி அந்த கதாபாத்திரங்களை முஸ்லிம்களாக ஆக்கியதுடன் நிற்காமல், அந்த முஸ்லிமகளை சாதாரணமானவர்களாக உலவ விட்டதுடன்,அவர்களைக் குறித்து மாற்றார் மனத்தில், அதுவும் சாதாரண மக்கள் மத்தியில் அதிபயங்கர சந்தேகக் கிளர்ச்சியை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடியது.

வெகுஜன ஊடகமாகிய சினிமா, பாமரர்களையும் எளிதில் சென்றடையக்கூடியது. வணிக நோக்கத்துக்காக என்று சப்பை கட்டிக் கொண்டு,ஒரு அபாயகரமான சிந்தனையை உள்வாங்கி, இயக்குநர் இப்படத்தை முன்வைத்திருக்கின்றார் என்றுதான் சொல்ல வேண்டும். “எனது ஊர்க்காரர்கள் பெரும்பாலோர் முஸ்லிம்கள்” என்று படஇயக்குநரும்,“அடுத்த படத்தில் முஸ்லிமாக நடிப்பேன்” என்று துப்பபாக்கி நடிகரும் ‘ஆறுதல்’ மொழி கூறுவது செய்திக்கு வேண்டுமென்றால் சுவாரஸ்யம் தரலாம். ஆனால்,பாபரி மஸ்ஜித் இடிப்புக்குப் பின்னர் வளர்ந்துவரும் பாசிச சக்திகளின் இன்னொரு வடிவமாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது இப்படத்தையும்..!

மறுபுறம் ஏதேனும் ஒரு அசம்பாவிதம் நடைபெறும் இடங்களை முன்னிலைப்படுத்தி இதுபோன்று திரைப்படங்கள் எடுத்து கல்லா கட்டுவதும், அதற்கு பகடைக்காய்களாக முஸ்லிமும்,இஸ்லாமும் பயன்படுத்தப்படுவதையும் இனியும் ஊடகங்கள் குறிப்பாக திரைஊடகம், கைவிடவேண்டும். முஸ்லிம்களை மட்டுமல்ல, வேறு ஏதேனும் குறிப்பிட்ட சமூகத்தினரை பொத்தாம் பொதுவாக, இதுபோல் சித்தரித்தாலும் எமது நிலைப்பாடு இதுவாகத்தானிருக்கும்.

மு.அ.அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw | musavir2010@yahoo.com | maam2k@gmail.com
http://www.facebook.com/vasanthammonthly | https://twitter.com/Vasantham2k
ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்





# நல்லதொரு குடும்பம்..! பல்கலைக்கழகம்..!!

**இல்லறம் என்றும் தென்றல் வீசும் நல்லகம்..!அதன் வளர்ந்தோங்கலுக்கு என்றும் வேண்டும் நல் அகம்..!பரஸ்பர புரிதலும் அழகிய பழகுதலுமே அதன் உன்னத அத்தியாவசியம்..!இறைவழிகாட்டுதலே இல்லறம் பேண வேண்டிய சந்நிதானம்..!!**

*அன்று 2006,பிப்ரவரி 22-ஆம் நாள் கேரளா, கோழிக்கோடு மாவட்டம்,குற்றியாடி எனும் ஊரில் நடந்த ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அங்கு வந்திருந்த ஒரு சகோதரியிடமிருந்து, ஒரு நீண்ட கண்ணீர்க் கடிதம் என் கைக்குக் கிடைத்தது.குடும்பத்தில் தான் அனுபவித்து வரும் துயரங்களை வேதனையோடு அதில் குறிப்பிட்டிருந்தார்.*

*அவர் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகின்றார்.இரண்டு வருடங்களுக்கு ஒரு*



முறை இரண்டு மாத விடுமுறையில் ஊருக்கு வருவார்.மீதமுள்ள 22 மாதங்களும் தனிமை-விரகதாபம்-துயரங்கள்தாம்..!

குழந்தைகள் மாமியாருடன் கணவரின் வீட்டில்தான் வசித்து வருகின்றார்.வீட்டிலோ, மாமியாரின் ஆட்சிதான்!

குழந்தைகளைப் பராமரித்து மாமியாரையும் கவனிக்க நாள்தோறும் கடுமையாக உழைக்க வேண்டும். தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்தால் இரவு பத்து மணி வரை ஓயாத வேலை.சமைக்க வேண்டும். மாமியாருக்கு குளிக்க வெந்நீர் காய்ச்ச வேண்டும்.துணி துவைக்க வேண்டும்.எல்லாம் ஒழுங்காகச் செய்தாலும் மாமியார் எப்போதும் திட்டிக் கொண்டேயிருப்பார்.எதிலும் குற்றம்,குறை சொல்லிக் கொண்டே இருப்பார்.ஒரு நல்ல வார்த்தை பேசியதே கிடையாது.நல்ல உடல்நலமும்,வணக்க வழிபாடுகளில் தீவிர ஈடுபாடும் கொண்டவர். எந்த வணக்கத்தையும் தவறாமல் செய்து வருபவர்.ஆனால்,தகாத வார்த்தைகளால் திட்டுவதற்கும் துன்புறுத்துவதற்கும், அவரது இறைபக்தி ஒரு தடையே அல்ல.!

கணவரும் உடன் இல்லாத தனிமை வாழ்க்கை, அத்துடன் மாமியாரின் இந்தப் போக்கும் சேர்ந்துகொள்ள எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. நான் என் செய்யட்டும்?-இதுதான் அக்கடிதத்தின் சாரம்..!

அதற்கு முன்தினம்தான், வேறொரு சகோதரி மலப்புரம் மாவட்டத்திலிருந்து தொலைபேசியில் என்னிடம் முக்கால் மணிநேரம் தன் துயரங்களைச் சொல்லி அழுதிருந்தார்.

பிரசவம் முடிந்து இருபத்தி ஐந்து நாட்கள்தான் ஆகியிருந்தது.இவர் கணவரும் வெளிநாட்டில் இருப்பவர்.அன்று காலை, கணவர் அங்கிருந்தே தொலைபேசியில் அழைத்து கோபமாகப் பேசினார். கடுமையாக எச்சரிக்கவும் செய்துள்ளார். இதற்கெல்லாம் காரணம் மாமியாரும், சின்ன நாத்தனாரும் தான். அவர்களின் பேச்சைக் கேட்டு அவருக்கு என் மீது தவறான கருத்து ஏற்பட்டுள்ளது.

“
**அழுகையும் குமுறலுமாய் பேசிய அந்த சகோதரிக்கு எவ்வளவு ஆறுதல் சொல்லியும் தேம்பித் தேம்பி அழுதவாறே ரிசீவரை வைத்தார்.**

என்னைப் பற்றி அவரிடம் எதையெதையோ சொல்லி, நான் சொல்வதைக் கேட்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாத அளவுக்கு என் மீது வெறுப்பை உண்டாக்கி இருக்கின்றார்கள்.

அழுகையும் குமுறலுமாய் பேசிய அந்த சகோதரிக்கு எவ்வளவு ஆறுதல் சொல்லியும் தேம்பித் தேம்பி அழுதவாறே ரிசீவரை வைத்தார்.

சமீபகாலமாக எனக்குக் கடிதங்கள் தொலைபேசிகள் பலவற்றிலும் இதுபோன்ற பல சகோதரிகள் தங்களின் துயரங்களைத் தெரிவித்து வருகின்றார்கள். கணவனால் ஏற்படும் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத.., மனைவி, மாமியாரின் துன்புறுத்தலை சகிக்க முடியாத மருமகள், மருமகளால் புறக்கணிக்கப்பட்ட மாமியார், நாத்தனார் என்று இம்சைக்கு ஆளானோர் இப்படிப் பலர்.

இதையெல்லாம் குறித்து ஆழமாகச் சிந்தித்தால், நமக்கு ஒரு விஷயம் புலனாகின்றது.

அதாவது மனித மனங்களில் முன்னைக் காட்டிலும் இப்பொழுது சுயநல எண்ணங்கள் அதிகரித்து வருகின்றது.எல்லோருக்கும் தங்கள் சொந்தத் தேவைகளைப் பற்றி மட்டும்தான் கவலை.அதற்கு மேல், சிந்திப்பதற்கு யாரும் தயாரில்லை. பிறருக்காக சொந்த நலன்களைத் தியாகம் செய்து அதனால் ஏற்படும் சிரமங்களைத் தாங்கிக் கொள்ளும் பக்குவமும், பரந்த மனப்பான்மையும் கொண்டவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. மற்றவர்களுக்காக சுய சவுகரியங்களை விட்டுக் கொடுப்பதிலும் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்வதிலும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்வதில் கிடைக்கும் நன்மைகளையும்,அதன் மகத்துவத்தையும் இன்று பெரும்பாலோர் மறந்துவிட்டனர்.

அதனால், நெருங்கிய உறவுகளுக்குக்கூட தன் தேவைகளை அர்ப்பணிக்க யாரும் முன்வருவதில்லை. தாய்,மகன்,மகள்,தந்தை,தமயன்,கணவன்,மனைவி, சகோதர-சகோதரிகள் இப்படி எந்த உறவுமே யாரும் யாருக்காகவும் எதையும் விட்டுக் கொடுத்து சின்னச் சின்ன கஷ்டங்களைக்கூடப் பொறுத்துக் கொள்வதில்லை. அதை ஒரு பாரமாகத்தான் நினைக்கின்றார்கள்.

கருணை, இரக்கம், பணிவு, வாஞ்சை, அன்பு, நேசம் போன்ற நற்பண்புகளை மனித மனங்களிலிருந்து அகன்றுவிட்டதுதான் இதற்குக் காரணம். அதுவோ,உலகத் தேவைகளின்பால் ஏற்பட்டுவிட்ட அளவு கடந்த மோகத்தினால் உண்டானது.


மேற்கத்திய புதுமை நாகரிகத்தின் தாக்கமும் முதலாளித்துவ வாழ்க்கை முறையும் ஏற்படுத்திய விளைவுகள்தான் இது!

இந்த நோய் நம் நாட்டில் பரவுவதற்குக் காரணம் செய்தி ஊடகங்கள்!

இன்று பெண்களுக்கு எதிரி பெண்களே.,! வேட்டைக்காரர்களும் அவர்களே..!வோட்டையாடப்படுவதும் அவர்களே.,!! இத்தகையச் சூழலில் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான அந்த முகம் தெரியாத சகோதரிகளின் துக்கமும் வேதனைக் கண்ணீரும் கண்டு உள்ளத்தில் பொங்கிய துயரத்தோடு எழுதப்பட்டதுதான் இந்த ஆக்கம்!

நுகர்வுக் கலாச்சாரம் இன்று உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது.எல்லாக் காரியங்களும் வியாபாரக் கண்ணோட்டத்திலேதான் பார்க்கப்படுகின்றது. இலாப நோக்கமே மேலோங்கி நிற்கின்றது.

இத்தகைய அபாயகர வணிகவ-ியல் கலாச்சாரத்தின் பிடியிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்பவர்கள் மிகக் குறைவு. இந்தக் கலாச்சாரம் மனிதஉறவுகள்,பந்த-பாசங்களைக்கூட விட்டு வைக்கவில்லை.கூட்டிக் கழித்து கணக்குப் பார்த்து இலாப-நஷ்டங்களை முன் வைத்துதான் புனிதமான திருமண உறவைக்கூட முடிவு செய்கின்றார்கள். வாழ்நாள் முழுவதும் ஓர் ஆணுக்குத் துணையாய்,தோழியாய்,நிழலாய்,ஆதரவாய் இருக்கப் போகும் இல்லாளைத் தேர்ந்தெடுக்கும்போதுகூட பேரம் பேசப்படுகின்றது.வரவும் இலாபமும் கணக்குப் பார்க்கப்படுகின்றது.





> இன்று பெண்களுக்கு எதிரி பெண்களே.,! வேட்டைக்காரர்களும் அவர்களே..! வேட்டையா டப்படுவதும் அவர்களே.,!!

ஆனால்,இஸ்லாம் வகுத்தளித்த இல்லற நெறியோ, அன்பு, பாசம், பரிவு, கருணை எனும் உணர்வுகளின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

திருக் குர்ஆன் கூறுகின்றது:

**மேலும், அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான் நீங்கள் அவர்களிடம் அமைதி பெறவேண்டும் என்பதற்காக! மேலும், உங்களிடையே அன்பையும், கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக, சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன. (30:21)**

அன்பு எனும் சொல்லில்தான் எத்தனை அழகு!கேட்பவரின் உள்ளத்தைக் குதூகலிக்கச் செய்யும் சொல் அது!தனக்கு அது கிடைக்க வேண்டுமென்று ஏங்காத மனம்தான் உண்டா?

பிறரிடம் அன்பு செலுத்தத் தெரியாதவர்கூட, தனக்கு அது கிடைக்க வேண்டுமென்றே விரும்பவார்.

உயிர் வாழ காற்றும் நீரும் எந்த அளவுக்கு அவசியமோ, அந்த அளவுக்கு சமூக உறவுகள் நிலைத்திருக்க மனித மனங்களில் நேச உணர்வு மிக மிக அவசிய-மாகும்.

அன்புதான் மனித இதயங்களைத் திறக்கும் சாவி..! பலமான ஆயுதத்தால் வீழ்த்த முடியாத ஒருவனைக்கூட அன்பினால் அடக்கிவிட முடியும்.அன்பின் வலிமைக்கு எல்லையே கிடையாது.அதனை அளவிடவும் முடியாது.

எந்தவொரு பொருளையும் செலவு செய்தால் தீர்ந்து போகும். ஆனால், அன்பின் நிலை அதற்கு நேர்மாற்றமானது. அது கொடுக்கக் கொடுக்க குறைவதில்லை. அதிகரிக்கத்தான் செய்யும் கொடுப்பதைவிட அதிகமாகத் திரும்பக் கிடைக்கும். மேலும்,இன்னும் அதிகமாகக் கொடுகக்த் தூண்டும். அதன் பலனாய் எல்லையற்ற அன்பு கிடைத்துக் கொண்டே இருக்கும்.

தாம் நேசிக்கின்ற ஒன்றிற்காக அனைத்தையும் அர்ப்பணிக்கவே. ஓவ்வொருவரும் தயாராய் இருப்பார்கள். பிறரின் நேசத்தைப் பெறுவதற்காகக் கடும் முயற்சி



செய்யும் ஒருவர் அதில் சோர்ந்து போவதுமில்லை. அந்த முயற்சியே அவருக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும்.

தான் அதிகமாக நேசிக்கும் தனது அன்பு மழலைக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் அது நலமடையும் வரை எத்தனையோ இரவு-பகல் ஊண் உறக்கமின்றித் தவிக்கும் ஒரு தாயின் உள்ளம் அதற்காக ஒருபோதும் சலிப்படைவதேயில்லை.அத்துடன் அக்குழந்தை நலம் பெற்றுவிட்டால் அந்தத் தாயின் உள்ளம் அடையும் ஆனந்தம் இருக்கின்றதே.., அப்பப்பா..! வார்த்தையால் வருணிக்க முடியாதது..!

மனித மனங்களை இணைக்கும் சங்கிலியில் அன்பைப் போலவே, கருணை உணர்ச்சியும் ஒரு முக்கிய கண்ணியாகும்.மனித உணர்ச்சிகளிலே மிகவும் புனிதமானது கருணை உணர்ச்சி.கருணையில்லாத மனம் பாலைவனத்திற்கு ஒப்பாகும்.

**ஆண் அடக்கியாள்பவனோ பெண் ஆளப்படுபவளோ அல்ல.!**

மனித உள்ளங்களின் இந்த சிறப்புக் குணங்களான, அன்பு, கருணை உணர்ச்சிகள்தான் தாம்பத்ய வாழ்வின் அடிப்படையாக அமைய வேண்டுமென்று திருக்குர்ஆன் வலியுறுத்துகின்றது.அத்தகைய தாம்பத்ய வாழ்வு உலகியல் மதிப்பீடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகும். கணிதவியல்படி ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால் இரண்டாகும். ஆனால், திருக் குர்ஆன் வகுத்துள்ள தாம்பத்ய நியதி அத்தகைய ஒன்றல்ல.,!

தம்பதிகளைப் பற்றிச் சொல்லும்போது கணவன்,மனைவி எனும் வார்த்தையைத்தான் நாம் உச்சரிக்கின்றோம்.ஆனால், திருக் குர்ஆன் அவர்களை 'இணைகள்" என்றே குறிப்பிடுகின்றது:

**மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள். மேலும், அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான். மேலும், அவை இரண்டின் மூலம் (உலகில்) அதிகமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான். (4:1)**

ஆண் என்பவன் பெண்ணை அடக்கி ஆளப் பிறந்தவன்.எனவே, பெண் ஆணுக்கு அடிமையாய் அடங்கிக் கிடக்க வேண்டும்அவன் எதை வேண்டுமானாலும் செய்யலாம்.எதையும் பேசலாம்.எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம்.எல்லாவற்றையும் ஒர பெண் சகித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.ஏன்,எதற்கு என்று கேள்வி கேட்கக்கூடாது. அவளுக்கு எந்தவிதக் கருத்தும் சொல்ல உரிமையில்லை என்பது போன்ற ஆணாதிக்கக் கொள்கையை இஸ்லாம் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.

அதாவது ஆண் அடக்கியாள்பவனோ பெண் ஆளப்படுபவளோ அல்ல.! மாறாக, ஒருவருக்கொருவர் ஆதரவு காட்டி அன்பு செலுத்தி,உதவி செய்து,சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் இணைகளாவர்.திருக் குர்ஆனின் 'இணைகள்" என்ற சொற்பிரயோகமே இந்தப் பொருளைத்தான் கொடுக்கின்றது.கணவன்-மனைவியருக்கு இடையேயான பரஸ்பர உரிமைகளை ஒருவருக்கொருவர் அங்கீகரிப்பதன் மூலமே புனிதமான தாம்பத்ய வாழ்வு சாத்தியமாகும்.

கணவனுக்கு, மனைவி இணையாகவும் துணையாகவும், தோழியாகவும், வாழ்வின் சக கூட்டாளியாகவும் இருக்கின்ற காரணத்தால், தன் கணவனிடமிருந்து அவளுக்கு முழுமையான அன்பும் ஆதரவும் கருணை சார்ந்த அரவணைப்பும் கிடைத்தாக வேண்டுமென்று திருக் குர்ஆன் வலியுறுத்துகின்றது:-

**..அவர்களோடு நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ நீங்கள் விரும்பாவிட்டாலும் பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில், ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் அல்லாஹ் அதில் பல நன்மைகளை வைத்திருக்கக் கூடும். (4:19)**

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் சிறந்தவர் தன் மனைவியிடத்தில் நல்ல முறையில் நடந்துகொள்பவரே..!:

மேலும் கூறினார்கள்: கண்ணியமுள்ளவர்தான் அவளைக் கண்ணியப்படுத்துவார். நீசபுத்தி கொண்டவர்தாம் அவளை நிந்திக்கச் செய்வார்"

நபி (ஸல்) ஒருமுறை தம் தோழர்களிடத்தில் கூறினார்கள்:

"எந்தவொரு இறைநம்பிக்கையாளரும் தம் மனைவியை வெறுக்க வேண்டாம்.அவளது ஒரு குணம் உங்களுக்குப் பிடிக்காமற் போகலாம்.ஆனால், வேறொரு நற்குணம் நீங்கள் விரும்பக் மூடியதாய் இருக்கும்"

ஆதாரம்: முஸ்லிம்

சிறப்புப் பேட்டி | M.H. ஜவாஹிருல்லாஹ்



> எனது இந்த தொலைக்காட்சி குறித்த நிலைப்பாடு குறித்து, "என்ன, இவன் முலலா மாதிரி பேசுறான்" என்று நீங்கள் நினைக்கலாம்.

# “வெட்கமே இல்லாமல் குடும்பமே பார்க்கின்றது.,!”

**ஆசிரியருடனான பேராசிரியரின் பேட்டி தொடர்கின்றது..!**

---

● எனினும் சில ஊடகங்களேகூட இருவேறுபட்ட முகங்களைக் கொண்டதாக இருக்கின்ற சூழலும் இருக்கின்ற நிலைமையில் எத்தகைய விழிப்பு உணர்வை சமூகம் கைக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்..?

*இன்றைய தமிழநாட்டில் எப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டுவிட்து என்றால், ஒரு வீட்டில், தொலைக்காட்சி பெட்டி முன்பாக அருவருப்பான ஒரு தொலைக்காட்சித் தொடரை, தாத்தா-பாட்டி,அம்மா-அப்பா,மகன்-மகள்,பேரன்-பேத்தி எல்லோரும் வெட்கமில்லாமல் ஒன்றாக அமர்ந்து பார்க்கும் நிலையைக் காண்கின்றோம்.*

● இதுபோன்று நடைபெறக் காரணம் என்ன..?

*முன்பெல்லாம் எப்படி என்றால், ஒரு கணவன்-மனைவி, தாங்கள் படம் பார்க்க நாடினால்கூட தனியாக திரையரங்கிற்கு சென்று பார்ப்பார்கள்.அல்லது விரசமில்லாத படத்தை குடும்பத்துடன் முயற்சி எடுத்து சென்று பார்ப்பார்கள்.ஆனால், வீட்டுக்குள்ளேயே வெட்கமில்லாமல் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பார்க்கும் நிலை இன்று.*

*கணவனும் மனைவியும் பரஸ்பரம் பேசிக்கொள்வதாற்கான சந்தர்ப்பமே வாய்ப்பதில்லை.இந்நிலையில், இந்த தாய்-தந்தையர் தங்களுடைய பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்கி அவர்களுடைய தேவைகள் என்ன...,உள்ளக் கிடக்கைகள் என்ன..., என்பது பற்றியெல்லாம் பேசுவதற்கு நேரமே வாய்ப்பதில்லை..!*

*வளைகுடாவில் உங்களைப் போன்றோர் பரபரப்பாக இயங்க வேண்டிய கட்டாய நிலை இருப்பது நியாயமாக இருப்பினும், தமிழ்நாட்டில்கூட அதே நிலைதான் நீடிக்கின்றது.நாள் முழுவதும் உழைத்து வீட்டுக்கு வரும் கணவனுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்கக்கூட நேரம் இன்றி, தொலைக்காட்சித் தொடரின் கதாபாத்திரம் எப்படி தன்னுடைய திட்டத்தில் எப்படி வெற்றி பெறுகின்றாள் என்று ஆர்வமாக(?) மூழ்கியிருப்பது அன்றாட வாடிக்கையாகிவிட்டது.*

*எனவே, இப்போதெல்லாம் நான் கலந்துகொள்ளும் திருமண மற்றும் சமூக நிகழ்ச்சிகளில் வெளிப்படையாக ஒரு விஷயத்தை சொல்கின்றேன்.அதாவது, இன்று நம்முடைய சமூகத்தில் குடும்பத்தினர் பெரும்பாலும் மனோநோயாளிகளாக இருக்கின்றார்கள் என்பதுதான் யதார்த்தமான ஒரு நிலை.!ஒவ்வொரு மஹல்லாக்ளிலும், ஜமாஅத் சார்பாக குடும்ப ஆலோசனைக் குழு-கவுன்சிலிங் மிக அத்தியாவசிய தேவையாக இருப்பதுதான் உண்மை நிலை..!*

*எனது இந்த தொலைக்காட்சி குறித்த நிலைப்பாடு குறித்து, “என்ன, இவன் முல்லா மாதிரி பேசுறான்” என்று நீங்கள் நினைக்கலாம்.ஆனால் நான் ஏற்கனவே சொன்ன மாதிரி,ஒரு கத்தியை ஆக்கபூர்வ பயன்பாட்டுக்கும் அல்லது அழிவுரீதியான பயன்பாட்டுக்கும் பயன்படுத்த முடியும் என்பது போல், ஊடகங்களை வைத்து மார்க்க ரீதியான பிரச்சாரங்கள் நடப்பது ஒருபுறமிருக்க, இதுபோன்ற விபரீதங்களும் நடக்கத்தான் செய்கின்றன என்பதும் யதார்த்தமான உண்மைதான்..!*

*பேராசிரியரின் எண்ணங்கள்...,தொடரும்*
*அடுத்த இதழில்..., இறைநாடின்..!*

**கல்விக்கு வயதே தடையில்லாதபோது, கல்யாண வாழ்க்கை போடுமா தடை..? கல்யாண வாழ்வைப் பாதிக்காது கல்வி கற்க புறப்படட்டும் திருமதிகளின் படை..!அறிவும், ஆளுமையும் அழகாய் கலக்கும் உன்னத அம்சத்தில் தடை ஏன் புக வேண்டும் இடை..?**

# கல்விக்குத் தடையா, கல்யாண வாழ்க்கை..?

இனிய கனவுகளும், இளமைத் துள்ளல்களும் நிறைந்தது கல்லூரிப் பருவம். அங்கே படிப்பைத் தவிர வேறு கவலையில்லை. வாழ்வில் சாதிக்க வேண்டும் எனும் தலையாய எண்ணமே அங்கு மேலோங்கி நிற்கும்.

ஆனால், வயது மற்றும் சம்பந்தத்தைக் காரணம் காட்டி இந்தப் பருவத்திலேயே மணமுடித்து வைக்கப் படுவோரும் உண்டு. பெரும்பாலும் இத்தகைய பாலினத்தினர் பெண்களாகவே இருக்கின்றார்கள். திருமணத்துக்குப் பின்னர், குடும்பப் பொறுப்புகள் தலைதூக்கும். படிப்பு பாரமாகத் தோன்றும். அதன்பின் குடும்பம், கணவன், குழந்தைகள் என அவர்களின் அறிவு முடக்கப்படுகிறது.

இதனால் திருமணத்திற்கு பின்பு உயர்கல்வி சாத்தியமாவதில்லை. பட்டப்படிப்புக்கு பின் தொடர்ந்து உயர்கல்வி பெறுவதும் சற்றே கடினமான விஷயமாகிவிடுகின்றது. திருமணத்திற்கு பின்பும் கல்வி கற்பது கல்யான வாழ்க்கையில் பெரும் பிரச்னைகளை ஏற்படுத்துகின்றதா..., என்ன?

பெரும்பாலோர் அவ்வாறு தான் நினைக்கின்றனர். காரணம், திருமணத்திற்கு பின் படிக்க செல்வதால் வீட்டில் பிரச்னை ஏற்படுகிறது. அதனால், கல்வியும் பாதிக்கப்படுகிறது. அதுவும் குழந்தைகள் பெற்றுவிட்டால், குழந்தைகளை வளர்க்காமல் உயர்கல்வி கற்க சென்றால், குடும்ப அமைதி கெட்டுவிடும் என்பதே பெரும்பாலோரின் கருத்தாக இருக்கின்றது.

இதற்கு இன்னபிற அசவுகரியங்களும் காரணங்களாக வைக்கப்படுகின்றன. அதாவது, திருமணத்திற்கு பின் கல்விக்காக, வீட்டை விட்டு அடிக்கடி வெளியே செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதுவும் "புராஜக்ட் ஒர்க்' என்றால் சொல்லவே வேண்டாம். இது விஷயமாக விஷயமாக பல ஆண்களுடன் பேச வேண்டியநிலை உருவாகும். இதனால் வீண் சந்தேக எண்ணமும், சங்கடமும் ஏற்படுவதால் தம்பதியர் மத்தியில் மனக்கசப்பு ஏற்பட்டு மனநிம்மதியுடன் படிக்க முடியாத நிலை உருவாகலாம்.

இப்படிப்பட்ட அம்சங்கள் யதார்த்தத்தில் இருந்தாலும், கல்வி என்பது அள்ளக் குறையா கடல்நீர் போன்றது.கடலில் அலைகள் உருவாவது இயற்கையே.ஆனால், அந்த அலைகளைத் தாண்டித்தான் கப்பல்கள் நங்கூரங்கள், திசைகாட்டிகள் உதவிகொண்டு இலக்கை அடைகின்றன. நமக்காக வாழ்வது ஒருமுறை தான்..!

**ஒரு பெண் கல்வி கற்றலை எவ்வாறு கல்யாண வாழ்க்கையோடு இயைந்து கொண்டு செல்கின்றாள் என்பதில்தான் சூட்சுமம் இருக்கின்றது.**

பெருமை படைத்த பெண் இனம் பிரச்னைகளை கண்டு ஒதுங்கக் கூடாது. பெரும்பாலான பெண் பேராசிரியர்களை நோக்கினால் அனைவரும் திருமணத்துக்குப் பின் படித்தவர்கள்தான். பரஸ்பர புரிந்துணர்வுடன் துணைவருக்குப் புரிய வைக்க வேண்டும். ஆணாதிக்க சமுதாயத்தில் உயர்கல்வி படிப்பதன் மூலமே நம்மை தக்க வைக்க முடியும் என்பதை பெண்ணினம் புரிந்துகொள்ள வேண்டும்.

பொருளாதார தேவைகளும், போட்டிகளும் மிக்க இவ்வுலகில்,மனைவி சம்பாதித்தால், குடும்பப் பொருளாதாரம் உயரும். ஒரு பெண் அதுவும் குடும்பப் பெண் படித்தால் அந்த குடும்பமே கல்வி கற்கிறது. படிப்புக்கு வயது, உயர்வு, தாழ்வு எதுவும் கிடையாது. திருமணத்திற்கு பின் குடும்ப பிரச்னை இருக்கத்தான் செய்யும். பிரச்னைகளை தாண்டி பெண்கள் படிக்க வேண்டும்.

மற்றொருபுறம், பல பெண்கள் படித்து விட்டோம் எனும் மமதையில் கணவரையும், குடும்பத்தினரையும் மதிப்பதில்லை. இம்மாதிரியான மனோபாவம் கூடாது.அதேபோல், வேலைக்கு செல்லும் பெண்களின் மனநிலையை வீட்டில் உள்ளவர்களும் புரிவதில்லை. பெண்ணிற்கு தன்னம்பிக்கை வேண்டுமானால் படிக்க வேண்டும் என்பதை அவளும், குடும்பமும், துணைவரும் புரிய வேண்டும்.


ஒருவேளை குழந்தை பிறப்பை தள்ளிப் போட நாடினால்,அதனை கணவரிடம் வேண்டுகோளாக சொன்னால் புரிந்து கொள்ளக்கூடியவராகவும் அவர் இருக்கலாம்.எந்த பிரச்னைக்கும் ஒரு தீர்வு உண்டு. பெண்கள் படித்தால், பல பிரச்னைகளுக்கும் தீர்வு ஏற்படும்.

எனவே, கல்யாண வாழ்க்கை எந்நிலையிலும் கல்விக்குத் தடையாக இருப்பதில்லை.ஆனால், ஒரு பெண் கல்வி கற்றலை எவ்வாறு கல்யாண வாழ்க்கையோடு இயைந்து கொண்டு செல்கின்றாள் என்பதில்தான் சூட்சுமம் இருக்கின்றது.

இந்நிலை உருவாக..., அழகிய மார்க்கமான இஸ்லாம், மிக எளிதான வழிகளை முன்வைக்கின்றது. பெண்கள் மட்டுமே பயிலக்கூடிய கல்வி வளாகங்கள்,ஹிஜாப் முறை, ஆய்வு தொடர்பாக ஆண்களுடன் பேச நேர்ந்தால் அதற்குரிய வரைமுறை என்று பல்வேறு நிலைகளையும் முன்னெடுத்துச் சென்றால், திண்ணமாக, கல்யாணத்துக்குப் பின்னரும் தடங்கல் இல்லா கல்வி கற்றலும்,இடர்கள் இல்லா இல்வாழ்க்கையும் அழகாய்த் தொடரும் இறைநாடின்..!









IPC சார்பாக புனித ரமளானில் நடைபெற்ற 11-ஆவது திருக் குர்ஆன் மனனப்ஆபாட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான கவுரவ விழா,ஆடவர் மற்றும் மகளிருக்குத் தனித்தனியே நடைபெற்றது. ஸீர்ரா,சர்வதேச இஸ்லாமிய அறக்கட்டளை அமைப்பின் அரங்கில் நடைபெற்ற ஆடவருக்கான நிகழ்வில்,குவைத் அமைச்சக செயலர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கிக் கவுரவித்தார். இஸ்லாமிய நிலையத்தின் துணைப் பொது

# திருக் குர்ஆன் மனனப் போட்டி பரிசளிப்பு விழா.,!





மேலாளர் அஷ்ஷேக் அப்துல் அஜீஸ் அல்-துவைஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குவைத்துக்கான பாகிஸ்தான் தூதர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். திருக் குர்ஆன் மனனப் போட்டி குறித்த கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



வெற்றியாளர்கள் (மேலே வலது ஓரம்)
வெற்றியாளர்கள் சிலர்..! (மேலே இடது ஓரம்)
திருக் குர்ஆன் மனனப் போட்டி குறித்த கண்காட்சி அரங்கு..! (இடது)
IPC துணைப் பொது மேலாளர் அஷ்ஷேக் அப்துல் அஜீஸ் அல்-துவைஜ் (இடது ஓரம்)



மகளிருக்கான நிகழ்வு IPC, ரவ்தா தலைமை கிளையில் நடைபெற்றது. வெற்றியாளர்கள் சான்றிதழ் மறறும் பணமுடிப்பு கொண்டு கவுரவிக்கப்பட்டனர்!



# குவைத் பல்கலைக்கழகத்தில் அழைப்புப் பணி நிகழ்வு..!

IPC- இஸ்லாமிய நிலைய - IPC, பணிகளின் ஒரு நிகழ்வாக முஸ்லிமல்லாதவர்கள் மத்தியிலான அழைப்புப்பணி நிகழ்வு ஒன்று குவைத் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. குவைத் பல்கலைக்கழக வளாகத்தின் பல்வேறு பிரிவுகளின் உடலுழைப்புத் துறைகளில் பணியாற்றும், தனியார் நிறுவன ஒப்பந்த ஊழியர்களில் உள்ள தமிழகத்து சகோதரர்கள் இதில் கலந்து கொண்டனர். பரஸ்பர அறிமுகத்துடன் ஆரம்பமான இவ்விழாவில், மதங்கள் மற்றும் கோட்பாடுகள் ஆய்வு குறித்த காணொளி காட்சி, மற்றும் உரை நிடைபெற்றது.

இஸ்லாமிய நிலைய, தலைமையக தமிழ்ப்பிரிவு சகோதரரும், வசந்தம் தமிழ் மாத இதழ் ஆசிரியருமான மு.அ. அப்துல் முஸவ்விர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு காணொளி காட்சியை நடத்தி சிறப்புரையும் ஆற்றினார். நிகழ்வின் முடிவில் வினாடி-வினா போட்டி நடைபெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவியவரும், அழைப்புக் களப் பணியாளருமான சகோ. நடராசன் (எ) சல்மான் இதற்கான ஏற்பாடுகளையும் நடத்தி ஒத்துழைத்தார்.











# கடமையே கண்ணென போற்றும் கணவனாய்..!

**கணவன் தான் கைக் கொண்டவளுக்கு அழகிய துணைவன்..! தான் பொறுப்பாக இருப்பவளின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் கொடையாளன்..! உண்ணுதல், உடுத்துதல் என்று ஒவ்வொன்றுக்கும் பொறுப்பானவன்..! பிடிக்காமற் போனாலும், அவளை விரும்ப வேண்டிய காரணங்களை ஆய்ந்து, ஆரத் தழுவுபவன்..! அவள் உமையே தன் கடமையெனக் கருதும் கண்ணானவன்..!**

திருமணத்திற்குப் பின்னர் தமது மனைவியுடன் பழகுவதிலும் அவளை நடத்துவதிலும் ஒரு கணவன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை, இஸ்லாமிய மார்க்கம் அழகாய் வகுத்துத் தருகின்றது. மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள், அவளுடன் அழகிய முறையில் பழகுவது, அவளைக் கண்ணியமாக நடத்துவது ஆக-யியவை குறித்து இஸ்லாம் அறிவுறுத்தும் நல்லுரைகளை நாம் ஆராய்ந்தால் அவை நம்மை வியப்பில் ஆழ்த்திவிடுகின்றன.

இஸ்லாம், பெண்ணின் உரிமைகளைப் பற்றி மிக ஆழமாக உபதேசித்துள்ளது. அவளுக்கு உலகின் எந்த மார்க்கமும் அளித்திராத உயரிய மதிப்பை வழங்கியுள்ளது.

அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்வில் ஒரு முறை, சில பெண்கள் தங்களுடைய கணவர்களைப் பற்றி முறையிடுவதற்காக அன்னார் அவர்களின் இல்லத்திற்கு வந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஆண்களின் காதுகளுக்கு எட்டும் விதமாக “முஹம்மதின் குடும்பத்தாரிடம் சில பெண்கள் தங்களது கணவன்மாரைப்பற்றி முறையிட வருகிறார்கள். அந்தக் கணவர்கள் உங்களில் சிறந்தவர்கள் அல்லர்” என்று கூறினார்கள். (ஆதாரம்:அபூதாவூத்)

ஏனைய மார்க்கங்களை ஒப்பிட்டு நோக்கின், பெண்ணுக்கு நீதி வழங்குவதிலும் அவளைக் கண்ணியப் படுத்துவதிலும் நேரிய மார்க்கமான இஸ்லாம், மிக உயர்ந்தே நிற்கிறது. அவளைக் கணவன் வெறுத்தாலும் அவளுடன் நல்ல முறையிலேயே நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறது.தங்களது வரலாற்றில் இஸ்லாத்தைத் தவிர வேறெங்கும் இந்தக் கண்ணியத்தை அடைந்து கொண்டதே கிடையாது.., பெண்கள் என நாம் அறுதியிட்டுக் கூறமுடியும்..!

.. அவர்களோடு நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ நீங்கள் விரும்பாவிட்டாலும் பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில், ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் அல்லாஹ் அதில் பல நன்மைகளை வைத்திருக்கக் கூடும்.
திருக் குர்ஆன் 4:19

இந்த இறைவசனம் உண்மையில் ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளுணர்வையும் தொட்டுப் பேசுகிறது. அவனது கோபத்தின் கொதிப்பைத் தணிக்கிறது.தம் மனைவி மீதான வெறுப்பின் வேகத்தைக் குறைக்கிறது. ஆகவே, இதன் மூலம் மணவளையம் துண்டிக்கப்படுவதிலிருந்து இஸ்லாம் அதைப் பாதுகாக்கிறது. இங்குமங்கும் அலைபாயும் மடத்தனமான எண்ணங்களாலும், மாறிக் கொண்டே இருக்கும் சுபாவத்தினாலும் தூய்மையானத் திருமண உறவில் பங்கம் ஏற்படுவதை விட்டும் கட்டிக்காக்கிறது.

தம் மனைவியின் மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டதால் அவளை விவாகவிலக்கு செய்யப் போவதாக கூறிய மனிதருக்கு உமர் (ரலி) அவர்கள் "உனக்கென்ன கேடு! இல்லறம் அன்பின் மீதுதானே அமைக்கப்படுகிறது. அதில், பராமரிப்பும் புறக்கணிப்பும் எப்படி ஒன்று சேர முடியும்?" என்று அறிவுரை கூறினார்கள்.

பெண்ணைப் பேணுவதைப் பற்றி நபி அவர்கள் கூறிய உபதேசங்கள் ஏராளமானவை. தமது மனைவியிடத்தில் அழகிய முறையில் நடந்து கொள்பவர்தான் இச்சமுதாயத்தின் சான்றோர்ஆக முடியும் எனும் அளவுக்கு நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்:
நம்பிக்கையாளர்களில் நம்பிக்கையில் (ஈமானில்) பரிபூரணமானவர் அவர்களில் மிக அழகிய குணமுடையவரே! உங்களில் சிறந்தோர் உங்கள் மனைவியிடத்தில் சிறந்தோரே!"
ஆதாரம்:திர்மிதி

இந்த நபிமொழி, நம்பிக்கையாளர் மிக நேர்த்தியான குணத்தைக் கொண்டிருக்க வேண்டும் அந்த குணமில்லாமல் பரிபூரண நம்பிக்கையை அடைய முடியாது.

நாம் யாரை நம்மில் சிறந்தவராக கருதுகிறோமோ அவர், தம் மனைவிக்கும் சிறந்தவராக விளங்க வேண்டும். நம்மிடத்தில் சிறந்தவராக இருந்து மனைவியிடத்தில் சிறந்தவராக இல்லையென்றால் உண்மையில் அவர் நம்மில் சிறந்தவரல்லர்' என்று வலியுறுத்துகிறது.

இதோ, அல்லாஹ்வின் தூதர் ஆண்களை எச்சரிக்கிறார்கள்:

பெண்,விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள். ஒரே நிலையில் உனக்கு நிலையாக இருக்கமாட்டாள். அவளிடம் நீ இன்பத்தை அடைய நாடினால் அவளிடம் குறையுள்ள நிலையிலேயே இன்பத்தை அடைந்து கொள்வாய்! அவளை நீ நேராக்க



**தம் மனைவியின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டதால்**

**அவளை விவாகவிலக்கு செய்யப் போவதாகக்கூறிய**

**மனிதருக்கு உமர் (ரலி) அவர்கள் "உனக்கென்ன கேடு?**

**இல்லறம் அன்பின் மீதுதானே அமைக்கப்படுகிறது.?**

**அதில், பராமரிப்பும் புறக்கணிப்பும் எப்படி ஒன்று**

**சேர முடியும்?" என்று அறிவுரை கூறினார்கள்.**

முயன்றால் ஒடித்து விடுவாய். அவளை ஒடிப்பது என்பது அவளைத் 'தலாக்' - விவாகவிலக்கு விடுவதாகும்."
(ஸஹீஹ் முஸ்லிம்)

இலக்கிய நயமான இந்த உதாரணத்தில் பெண்ணின் இயற்கைத் தன்மைகளையும் பண்புகளையும் மிகத் துல்லியமாக நபி (ஸல்) அவர்கள் விவரித்துள்ளார்கள்.

மனைவி என்பவள் கணவர் விரும்புவது போன்று ஒரே நிலையில் சீராக இருக்கமாட்டாள். அவளிடம் சில கோணலான பண்புகளும் இயல்பாகவே அமைந்திருக்கும். இதைக் கணவர் விளங்கிக் கொள்ள வேண்டும். பூரணமானது அல்லது சரியானது என, தாம் நினைக்கும் முறையில் அவளைத் திருத்திவிட முயலக் கூடாது. பெண்மைக்கென்று அமைந்துள்ள இயற்கைப் பண்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவளை, அல்லாஹ் எந்த இயல்புடன் படைத்தானோ அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதர் நபியவர்களிடம் "மனைவிக்குக் கணவன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?" என்று கேட்டார் அதற்கு நபி அவர்கள், 'நீ உண்ணும் போதுஅவளுக்கு உணவளிப்பதும் நீ அணியும்போது அவளுக்கு அணிவிப்பதும் வீட்டில் (கண்டிக்கும் போது) முகத்தில் அடிக்காதிருப்பதும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தாமல்.., மேலும், மற்ற இடங்களில் வெறுக்காமல் இருப்பதும் ஆகும்" என்று கூறினார்கள்.
அறிவிப்பாளர்: முஆவியா பின் ஹைதர் (ரலி)
ஆதாரம்: அபூதாவூத் 1830
அஹ்மத் 19162

"இறை நம்பிக்கை கொண்ட வர்களில் முழுமையான நம்பிக்கை கொண்டவர் அவர்களில் நற்குணம் கொண்டவரே! உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடம்நற்பண்பால் சிறந்து விளங்குபவரே!"என்று நபி அவரகள் கூறினார்கள்.
அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி)
ஆதாரம்: திர்மிதி 1082

**பாலியல் என்பதும் மார்க்கத்துடன் தொடர்புடைய அம்சம்..!
இறை காட்டிய வழியில் அது குறித்து அறிவைப் பெற்றுக் கொள்ள காட்டக்கூடாது
தயக்கம்.! இதுவிஷயத்தில் மார்க்க அம்சங்களிலிருந்து விலகி உலக
மாயையகளின்பால் கொள்ள வேண்டாமே மயக்கம்!
வழிகாட்டவே இந்த நூல் அறிமுகம்!**

# இச்சைக்கு மட்டுமா.., இல்வாழ்க்கை..?



மவுனங்கள் உடைபடும் காலம் இது. ஒரு காலம் இருந்தது. செக்ஸ் பற்றிப் பேசினாலே பாவம், பாலியல் குறித்து விவாதிப்பதே வரம்புமீறிய செயல் என்றெல்லாம் கருதப்பட்டு வந்தது. அதன் காரணமாக புதுமணத் தம்பதிகளுக்குக்கூட இஸ்லாம் கூறும் பாலியல் வழிகாட்டுதலை வழங்காமல், 'கட்டுப்பாடு' எனும் போர்வையில் பாலியல் அறியாமையைத்தான் வளர்த்து வந்தோம்.

**பாலியல் பற்றி முஸ்லிம் அறிஞர்களிடமோ பெரியவர்களிடமோ பேசினால் தப்பாக நினைப்பார்கள் என்பதால் அதுபற்றிய தங்களின் ஐயங்களுக்கு மார்க்கத்துக்கு வெளியே தீர்வுகளைத் தேடத் தொடங்கினார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.**

இதனால் இளம் தலைமுறையினர் வழிமாறிச் செல்லத் தொடங்கினர். பாலியல் பற்றி முஸ்லிம் அறிஞர்களிடமோ பெரியவர்களிடமோ பேசினால் தப்பாக நினைப்பார்கள் என்பதால் அதுபற்றிய தங்களின் ஐயங்களுக்கு மார்க்கத்துக்கு வெளியே தீர்வுகளைத் தேடத் தொடங்கினார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

ஆனால் இப்போது காலம் மாறுகிறது. இது தகவல் தொழில்நுட்ப யுகம். ஒரு பொத்தானின் தட்டலில் பிரபஞ்சமே விரியும் காலம். பாலியல் எம்மாத்திரம்? ஆகவே இனியும் மவுனம் அழகன்று. இளைஞர்களுக்கும் புதுமண இணைய-ருக்கும் கணவன்-மனைவியர்க்கும் இல்லற உறவு குறித்தும் பாலியல் விவகாரங்கள் குறித்தும் குர்ஆன்-ஹதீஸ் அடிப்படையில் வழிகாட்டுதலை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகி விட்டது.

சமூகத்தின் மிகச் சிறிய, ஆனால் முக்கியமான உறுப்பு குடும்பம் ஆகும். திருமண உறவின் மூலமாகவே அது வடிவம் கொள்கிறது. பொருத்தமான இல்லறம்தான் பக்குவமான தலைமுறைக்குத் தொட்டில் இடுகிறது. குடும்ப உறவுகள் சிதையுமேயானால் சமுதாய அமைப்பே நிலைதடுமாறிப் போய்விடும். ஆக்கபூர்வமான சமுதாய அமைப்புக்கு உறுதியான குடும்ப உறவுகள் தவிர்க்க முடியாதவை ஆகும்.

சிறிய செயலைக்கூட அழகாகச் செய்ய வேண்டும் எனில் சில நியமங்களையும் வழிகளையும் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இல்வாழ்க்கை என்பது ஓர் அறம்., ஒரு கலை.! பார்த்துப் பார்த்துச் செதுக்க வேண்டிய அழகியலின் வெளிப்பாடு பண்புகள் மிளிர வேண்டிய பாசமலர்த் தோட்டம் இல்லறத்தின் நோக்கம் வெறும் பாலியல் வேட்கை மட்டுமன்று, குறுகிய காலத்திற்கான ஏற்பாடுமன்று.

மாறுபட்ட சூழ்நிலைகளில் வளர்ந்து வந்த இரண்டு இதயங்கள் ஆயுள் காலம் வரை கருத்தொருமித்து வாழ்வதற்குப் பெயர்தான் இல்லறம். வரும் தலைமுறைக்கு அடித்தளமாக இருப்பதுதான் இல்லறம். அறிவும் பயிற்சியும் அதற்கு மிகமிக இன்றியமையாதவை ஆகும். அதனால்தான் இத்துறை குறித்து இஸ்லாம் மிக ஆழமான, அழகான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

மேற்கண்ட வரிகள்இஸ்லாத்தில் இல்லறம் எனும் நூல் அறிமுகத்திலிருந்து..!

இந்தியாவில் இந்நூல் பெற: 00916624401
விலை இந்திய ரூபாய்கள்: 170/-

# என் கண்கள் சுமந்த fdTfnsyyhk.!

என்னை தழுவிக் கொண்ட
நிராசைகளுக்கு மத்தியில்..!
என் இதயத்தின்
மூலை முடுக்குகளிலெல்லாம்..!
சிந்திக் கிடப்பது
சோகமும் துக்கமும் தான்!

கல்யாணமான
தோழிகளையெல்லாம்
பார்க்கும் போது!
என்னை அறியாமலேயே
என் கண்களில் துளிர்த்துவிடும்
கண்ணீர்த் துளிகள்..!

என் அகராதித் தாள்களில்
மணக்கோலம் என்ற
வார்த்தை மட்டும்
மங்கலாய்த் தெரிவதேன்?!

பெண் பார்க்க வந்த
கோழைகளெல்லாம்...
"பொன்" பார்த்துச்
சறுக்கி விழுவதேனோ...??

வேதம் கற்றவர்களும் கூட
பொருளாதாரம் எனும்போது.,
பேதம் பார்ப்பதுதான்
கொடுமையிலும் கொடுமை!

"கல்யாணப்" பருவம்
எய்திவிட்டால்..,
மார்க்கத்தை மறந்துவிட்டு
மணாளர்களெல்லாம்
பணாளர்களாய் பரிணாமம் அடைவதேன்...??



யூஸூ.:.பும் சகோதரர்களும்.!

10

# அரசர் கனவின் அர்த்தம்.,!

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில் மழலைப்ரியன்

எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்ட யூஸூ ஃப் கூறினார்:"தோழரே! ஆரசர் கண்ட கனவின் பலன் இதுதான்:-ஏழாண்டுகள் வரை நீங்கள் தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டிருப்பீர்கள். அந்தக் காலகட்டத்தில் நீங்கள் அறுவடை செய்ததில் உங்கள் உணவுத் தேவைகள் போக மற்ற தானியத்தை சேமித்து வையுங்கள்.

அதன் பிறகு கடினமான ஏழாண்டுகள் வரும். நாட்டில் வறட்சியும், பஞ்சமும் தாண்டவமாடும். அப்போது விதைக்கான தானியங்களைத் தவிர, சேகரித்து வைத்திருந்த தானியத்தை பயன்படுத்திக் கொள்ளவும்

அதன் பிறகு வரும் ஆண்டு செழிப்பான காலம். பயிர்கள் வளர்ந்து அமோக விளைச்சலைத் தரும். மக்கள் பழரசமும், எண்ணெய்யும் தயாரிப்பார்கள். எல்லாரும் வளமுடன் வாழ்வார்கள்." குனவின் பலனை அறிந்துகொண்ட பணியாள் அரசரை சந்திக்க விரைந்தான்..!

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

## திருக் குர்ஆன்

அத்தியாயம் 109
**அல் மாவூன்**
மக்காவில் அருளப்பட்டது
வசனங்கள்:7

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ①

فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ④

108:4 ஃபவைலுல் லில் முஸல்லீன்

108:4 மேலும் கேடுதான், தொழுகையாளிகளுக்கு!

الَّذِيْنَ هُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنَ ⑤

108:5 அல்லஜீ(zee)நஹூ ம் அன்ஸலாதிஹிம் ஸாஹூ ன்

108:5 அவர்கள் தம் தொழுகையில் அலட்சியமாய் இருக்கிறார்கள்

الَّذِيْنَ هُمْ يُرَآءُوْنَ ⑥

108:6 அல்லஜீ(zee) நஹூ ம் யுராவூன

108:6 அவர்கள் பிறருக்குக் காட்டுவதற்காகவே செயல்படுகின்றார்கள்

وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ ⑦

108:7வயம்னவூனல் மாவூன்

108:7 மேலும், சாதாரணத் தேவைகளுக்கான பொருள்களைக் கூட (மக்களுக்குக்) கொடுத்துதவுவதைத் தடுக்கின்றார்கள்.



# நான் நோக்கும் என் அழகிய மணாளன்..!

**இது ஒரு இஸ்லாமிய பெண்மணி, ஆண்மகனை பற்றி வரைந்த பதிவு! ஒரு முஸ்லிம் ஆண் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் குறித்த அழகிய ஆய்வு..! தன் மணாளனின் ஆளுமை குறித்து ஓர் மங்கையின் எதிர்பார்ப்பு..!**

வழக்கம்போலவே, ஒரு நாள் வீட்டையும் தன் மகனையும் சமாளிக்குறதை பத்தி ரொம்ப புலம்பிட்டு இருந்தாள் என் தோழி! ஆனா, ஒரு பெரிய மிஸ்டேக் பண்ணிட்டாள்.... என்னன்னா, புலம்பினது தன் தம்பிக்கிட்ட! அவன் உடனே "அக்கா, டோன்ட் க்ரிப் அபௌட் திஸ்! இட் இஸ் ஒன்லி யுவர் ஜாப்"!! அப்படின்னான்! வந்துச்சு பாருங்க கோவம்!

ஒரே ஒரு கேள்வி தான் அவனை கேட்டேன். கப் சிப். புள்ளை அதுக்கப்புறம் வாயே திறக்கல. இப்ப அதே கேள்வியை எல்லாருக்கும் கேட்கலாம்னு இருக்கேன்!

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருக்கும்போது என்ன செய்வார்கள் என்பது ஆண்களாகிய கணவன்மார்களுக்குத் தெரியுமா..? மனித குலம் முழுவதற்கும் மாபெரும் தூது செய்தியைக்கொண்டு வந்த அந்த மாமனிதர்,வீட்டிலிருக்கும்போது, வீட்டை பெருக்குவதிலும், துணிகளை தைப்பதிலும்,ஆட்டிடம் பால் கறப்பதிலும் உதவி செய்தார்கள் என்றால் உங்களால் நம்ப முடியுமா?!

ஆனால், இப்போது நமது கணவன்மார்களை நோக்குவோம்..! எத்தனை பேர் இதை கடைப்பிடிக்கிறீங்க.., சொல்லுங்க?

வீட்டுக்கு வந்தவுடன், "நானே டயர்டா ஆஃபீஸ்ல இருந்து வந்திருக்கேன், என்னை தொந்தரவு பண்ணாத"ன்னு சொல்லாத ஆண்களை விரல் விட்டு எண்ணிடலாம்..!சும்மா குளு குளுன்னு ஏஸி-இல் உட்கார்ந்த இடத்தில் வேலை செய்யும் நீங்க, பொறுக்க முடியாத வெயிலில், மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்த நபி (ஸல்) அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டது என்ன?

வீட்டை நிர்வகிப்பதில் ஒரு பெண்ணுக்கு மட்டும் தான் கடமை, ஆணுக்கு அதில சம்பந்தமே இல்லைன்னு நினைப்பவர்கள் கொஞ்சம் நபிவழியையும் கடைப் பிடிக்கட்டுமே..!

இஸ்லாத்தை பொறுத்த வரை உங்கள் வேலையும் வீட்டில் தான் துவங்குகிறது. அந்தவீட்டை நடத்துவதற்க்கு தான் நீங்கள் வெளி-யே சென்று சம்பாதிக்கிறீர்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் வெளியில் சென்று பொருள் ஈட்டுவதோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாக நினைக்கிறார்கள். அதுவும் தான் பெற்ற பிள்ளையே கொஞ்சம் அழுதாலும் போதும், எரிச்சல் வந்து விடுகிறது.

ஒரு வீட்டில் உள்ள ஆண் தனது குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு பொறுப்பாளி ஆகி-றார். அவர்களின் உணவு,உடைமை, அனைத்திலும் செலவழிக்க வேண்டியது அவரது கடமையாகிறது. தனது தந்தை, மகன், கணவர், சகோதரர், இவர்களின் சம்பாத்தியத்தில் அப்பெண்ணுக்கு உரிமை இருக்கிறது.

மாறாக, அப்பெண் எவ்வளவு தான் செல்வம் படைத்தவள் என்றாலும், வீட்டின்மீது செலவழிக்க அவளுக்கு கடமையில்லை,அவர்களுக்கு உரிமையும் இல்லை. எத்தகைய சூழ்நிலையிலும், ஒரு வீட்டுக்காக உழைத்து கொண்டு வருவது ஆணின் கடமையே. இதனால் தான் பெண்களுக்கு ஆண்களை அல்லாஹ் பொறுப்பாளி ஆக்கியுள்ளான்.இவ்வாறு கடினப்பட்டு உழைத்துக்கொண்டு வந்த பணத்தை வீணடிக்கும் பெண்களும் இருக்கிறார்கள். அதைப்பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

**வீட்டுக்கு வந்தவுடன், "நானே டயர்டா ஆஃபீஸ்ல இருந்து வந்திருக்கேன், என்னை தொந்தரவு பண்ணாத"ன்னு சொல்லாத ஆண்களை விரல்விட்டு எண்ணிடலாம்..!**

இப்போது இந்த ஒரு பொறுப்பை பெரும்பாலானவர்கள் எப்படி தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று பார்ப்போமா..?

**அடுத்த இதழில் இறைநாடின்..!**



## மறைந்தார்..,
# மர்யம் ஜமீலா..!

மர்யம் ஜமீலா இன்று நம்மிடம் இல்லை!

உலக அளவில் பிரபல இஸ்லாமிய பெண் எழுத்தாளராக வலம் வந்த மற்றும் அறிஞராக விளங்கிய மர்யம் ஜமீலா 31.10.2012 அன்று லாகூரில் மரணமடைந்தார். சில மாதமாக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவர் தன்னுடைய 78வது வயதில் காலமானார். இறைவன் இவரை பொருந்திக் கொள்வானாக! இவரது பாவங்களை மன்னிப்பானாக!

மே 23, 1934 ஆம் ஆண்டு அமெரிக்க தலைநகர் நியூயார்க்கில் உள்ள ஒரு யூத குடும்பத்தில் பிறந்த மார்கரெட் மார்கெஸ் எனும் இயற்பெயர் கொண்ட மர்யம் ஜமீலா தன்னுடைய 19வது வயதிலிருந்து மதங்களை குறித்து ஆராய தொடங்கினார். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குர்ஆனும் யூதராக இருந்து இஸ்லாத்தை தழுவிய முஹம்மது அஸத் அவர்களின் புத்தகங்களும் மர்யம் ஜமீலாவை இஸ்லாத்தை நோக்கி ஈர்த்தன.

மே 24, 1961ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்று கொண்ட மர்யம் ஜமீலா தென் ஆப்பிரிக்காவில் இருந்து வெளியாகும் முஸ்லீம் டைஜஸ்டில் எழுத தொடங்கினார். அதே பத்திரிகைக்கு எழுதி கொண்டிருந்த ஜமாத்தே இஸ்லாமியின் நிறுவனர் மவுலானா சையத் அபுல் அஃலா மவ்தூதி-இன் எழுத்துக்களால் கவரப்பட்டார்..!

அவருடைய அறிவுரையின் பேரில் பாகிஸ்தானுக்கு 1962ல் சென்று மவுலானாவின் வீட்டோடு தன்னை இணைத்து கோண்டார். பின்பு முஹம்மத் யூஃஸூ ப்கான் என்பவருக்கு இரண்டாம் தாரமாக தானே முன்வந்து மணமுடித்து கொண்டார். யூஃஸூ ப்கான் ஜமாஅத்தே இஸ்லாமியின் முழு நேர ஊழியர் - இவரே பின்னர், மர்யமின் நூல்கள் அனைத்திற்கும் பதிப்பாளரானார். அதைத் தொடர்ந்து மர்யம் நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி தனது மக்களுடனும், சக மனைவியுடனும் (சக்களத்தியாருடனும்) மாமனாரது ஒரு பெரிய, கூட்டுக் குடும்ப வீட்டில் வசித்து வந்தார்.

மர்யம் நாத்திகம் மற்றும் பொருளாதாரத்தின் அனைத்துவித பழைய, புதிய வெளிப்பாடுகளின் மீதும் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டிருந்தார். சம்பூரணமான, நிலையான, மறுமை அறங்களின்பால் தனக்குள்ள தீராத் தேடுதலிற்கு விடையாக இஸ்லாத்தை கண்டார். அதுவே, வாழ்வுக்கு மற்றும் மரணத்துக்கு பொருளும் திசையும் நோக்கமும் மதிப்பும் வழங்கும் இறுதிவழி என்பதில் உறுதியாக இருந்தார்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண முதல்வர் இவரது இறப்புக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். லாகூரில் உள்ள சன்னத் நகர் மையவாடியில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. பிரபல இஸ்லாமிய அறிஞர்களான முஹம்மத் அஸ்லம், டாக்டர் ஃபரீத் அஹ்மத், மியான் மக்சூத் போன்ற பிரபலங்கள் பிரார்த்தனை தொழுகையில் கலந்து கொண்டனர்.


(சர்வதேச பத்திரிகைகள் பெரும்பாலும் இந்த அறிவுஜீவிப் பெண்ணை மறந்துவிட்ட நிலையில், இந்தியாவின் 'அவுட்லுக்' ஆங்கிலப் பத்திரிகை மட்டும் இரங்கல் கட்டுரை வெளியிட்டிருந்தது..!)



## கசக்காத நீ.. ண்.. .. ட .. .. கால இல்வாழ்க்கை..

“..ம்” என்றால் பிரிவு.., ஏன் என்றால் விலக்கு” என பெருகிவிட்ட இன்றைய திருமண பந்தத்தில், கடந்த 87 ஆண்டுகளாக இல்வாழ்க்கையை இனிதே நடத்தி வருகின்றது இந்திய தம்பதி ஒன்று..!பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் **கரம்சந்த்.** இவருக்கும், கதாரி என்பவருக்கும் 1925-ம் ஆண்டு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 8 குழந்தைகள் பிறந்தன. அவர்கள் மூலம் 28 பேரன், பேத்திகள் உள்ளனர்.

பஞ்சாபில் இருந்து லண்டனுக்கு குடிபெயர்ந்த இத்தம்பதிகள் கடந்த 87 ஆண்டுகளாக கணவன்- மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள். இதன் மூலம் உலகில் நீண்ட நாட்களாக சேர்ந்து வாழும் தம்பதி என்ற புதிய சாதனையை படைத்துள்ளனர். அவர்களது இந்த சாதனை விரைவில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற உள்ளது. கரம்சந்துக்கு தற்போது 107 வயதாகிறது. அவரது மனைவி கதாரிக்கு 100 வயதாகிறது. உலகின் நீண்டநாள் தம்பதியரான இவர்கள் பற்றி லண்டனில் உள்ள பத்திரிகைகள் சிறப்பு செய்திகள் வெளியிட்டுள்ளன.



அவர்கள் தங்கள் வாழ்க்கை வெற்றி பற்றி கூறுகையில், நாங்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமாக இருக்கிறோம். எங்களுக்குள் எந்த பிரச்னையும் ஏற்பட்டதே இல்லை. எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம். அதனால்தான் இவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ முடிந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

## பிரசவம் ஒன்று..! பிள்ளைகள் ஆறு..!!



அமெரிக்காவை சேர்ந்த பெர்கின்ஸ் என்ற பெண் கர்ப்பம் அடைந்தார். அவரை டாக்டர்கள் பரிசோதித்ததில் அவரது வயிற்றில் 6 சிசுக்கள் உருவாகி இருப்பது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து டாக்டர்கள் அவரது கருவின் வளர்ச்சியை 30 வாரமாக தீவிரமாக கண்காணித்து வந்தனர். இந்த நிலையில் அவருக்கு 35 டாக்டர்கள் கொண்ட ஒரு குழுவினர் முன்னிலையில் பிரசவம் நடந்தது. ஒவ்வொரு குழந்தையும் 4 நிமிட இடைவெளியில் பிறந்தன. இதில் 3 ஆண், 3 பெண் குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்தன. பிறந்த குழந்தைகளில் அதிகபட்சமாக 2.15 பவுண்டு எடையும், குறைந்தபட்சமாக 1.10 பவுண்டு எடையும் இருந்தது. 6 குழந்தைகள் பெற்றெடுத்தது மிகுந்த சந்தோஷமாக இருப்பதாக பெர்கின்ஸ் கூறியிருக்கிறார்.

## “முதிய இளைஞன்”..!



பிள்ளை வரம் வேண்டி தவம் கிடக்கும் மாந்தர் பலர்..!ஆனால், இறைவன் தான் நாடியோர்க்கு எந்த வயதில்.., எப்போது வழங்குவான் என்று தெரியாது..!

இந்தியாவில் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த ராம்ஜித் ராகவ் என்ற முதியவர் தனது 96 வயதில் அப்பாவாகி தனது சாதனையை தானே முறியடித்துள்ளார். இவர் தனது 94-ஆவது வயதில் குழந்தை ஒன்றிற்கு தந்தையாகி வயது முதிர்ந்த காலத்தில் தந்தையானவர் என்று சாதனை படைத்தார்.

தற்போது தொடர்ந்து இரண்டு தடவை வயது முதிர்ந்த காலத்தில் அப்பாவான சாதனையை தம் வசப்படுத்தியுள்ளார் இந்த முதியவர்.

## தாயுமானவன்



இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் ரிக்‌ஷாகாரர் ஜாதவ் என்பவர் தனது கழுத்தில் துணியொன்றில் தனது ஒருமாதக் குழந்தையை தொங்கவிட்டு, அணைத்து பிடித்தபடி ரிக்‌ஷா வண்டி ஓட்டி வருகிறார். இவரது மனைவி சாந்தி கடந்த செப்டம்பர் 20-ஆம் தேதி குழந்தையொன்றை பெற்றெடுத்த நிலையில் உயிரிழந்துவிட்டார். தாய் உயிரிழந்ததையடுத்து குழந்தையை பார்த்துக்கொள்ள வீட்டில் யாரும் இல்லாதபடியால், அந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு ஜாதவ் தினசரி தொழிலுக்கு புறப்பட்டு விடுவார்.

இந்தக் குழந்தையின் நிலையினை அறிந்த கலெக்டர் குழந்தையை மீட்டு அரசு மருத்துவமனையில் பராமரிக்க உத்தரவிட்டுள்ளார். குழந்தையினை சரியாக பராமரிக்காததால் மிக பலவீனமாகவும், உடலுறுப்புகள் பாதிக்கப்பட்டிருப்பதால் தற்போது வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சிகிச்சை அளிப்பதன் மூலமே நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.

தன் நிலையினைக் குறித்து ரிக்‌ஷா தொழிலாளி ஜாதவ் கூறுகையில், “தாயை இழந்த குழந்தையை பராமரிக்க ஆள் இல்லாததால் நானே புட்டிப்பாலுடன் ரிக்‌ஷா ஓட்ட புறப்பட்டு விடுவேன். கழுத்தில் தொங்கவிட்டபடி செல்லும் போது குழந்தை சிறுநீர், மற்றும் மலம் போய் விடும். ரோட்டில் தண்ணீர் இருக்கும் இடத்தில் கழுவி விடுவேன். பால் கொடுப்பதும், கவனித்து கொள்வதும் மிக சிரமமாக இருந்தாலும், எனது பிள்ளைக்கு யார் செய்வார்?” என்று கண்ணீருடன் கலங்கினார் ரிக்‌ஷா தொழிலாளி ஜாதவ்.

தற்போது இந்த குழந்தையின் முழுச்செலவையும் ஏற்றுள்ள அரசுக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

போட்டிப் படிவம் முகநூலிலும் கிடைக்கும்
facebook/vasanthamtamil

# அறிவுப் போட்டி!

கடந்த (அக்டோபர் 2012) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி,பின்வரும் கூற்றுக்கள் மற்றும் கூற்றுக்கு உரியவர்களின் படங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமானவர்களின் படங்களுக்கு அருகில் உள்ள வெற்றிடத்தில் இடுக..!

மொத்தம் 3 பரிசுகள்

1 "நான் ஹிந்து என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகின்றேன்..!"



2 அண்மையில் மறைந்த அறிஞர்,,!



3 கொரிய தூதரகத்தில் IPC விழா.,!



4 வேகமாக வளருகின்றது இஸ்லாம்!



5 இயேசு ஒரு முஸ்லிம்.,!



## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 12. 2012 10. முடிவுகள் வசந்தம் ஜனவரி 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

## சுயவிவரம்

பெயர் Name

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்/நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait




*வாழ்க்கையைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம்..!அழகிய தருணங்கள்.., ஆழிய அன்பை வெளிப்படுத்தும் உன்னத சாகசங்கள்.!சிறப்பான முறை வாழ்க்கை..!அனைத்து அம்சங்களும் உங்கள் வாழ்வின் உன்னத தாத்பர்யங்களை மிக நேர்த்தியாக்கிக் காட்டும்..!மாற்றங்களின் அனைத்து அம்சங்களையும் என்றும் பொருந்திப் போகும் மாறாத வாழ்க்கை சட்டங்களைக் கொண்டு முன்னெடுத்துச் செல்ல உங்களைத் தயார்படுத்துகின்றது வசந்தம்.சுறுசுறுப்பு,சுவாரஸ்யம் அத்துடன் கொஞ்சம் ஆகுமான குறும்புத்தனமும் நிரம்பியதாய் புதுமையுடன் உங்களைக் கவர்ந்து அணைத்துக் கொண்டு நடைபோடுகின்றது..!*




**வசந்தம்** **உங்கள் இருமை வாழ்வின் முன்னேற்றத்துக்காக எப்போதும் உங்களுடன்..!**

**தொடர்புக்கு** 972666883 - 97848068 vasanthammonthly@yahoo.com

**வாழ்வியல் | குடும்பவியல் | ஒழுக்கம் | வழிபாடு | சமூகம் | ஆளுமை | கல்வி | கவிதை**
**மழலையர் | ஆய்வு | பேட்டி | இலக்கியம் | நிகழ்வுகள் | உலகம் | தேசம் | போட்டி**

**இணையம் மற்றும் சமூக வலைதளங்களிலும்..!**


நவம்பர் 14: குழந்தைகள் தினம்
தத்தித் தத்தி விழுகின்றாய்..!
விழுந்த பின் சிரிக்கின்றாய்..!
பின் எழுகின்றாய்.,!
உன்னிடமிருந்து
உணர்ந்துகொண்டேன்..,
விழுதலிலும்,எழுதலிலும் இல்லை
சோகமும், சந்தோஷமும்
எல்லாம் அவரவர் மனதினில்..!